இரத்தத்திலகம்

இரத்தத் திலகம் பாடல்கள்

பாட்டு 1 ஆங்கிலப் பாடல்

ஆன் தி மெர்ரி கோ ரவுண்ட் லெட் அல்ரைடு அண்ட்ரோல்
ஆன் தி மெர்ரி கோ ரவுண்ட் லெட் அஸ்ராக் அண்ட்ரோல்
ஆன் தி மெர்ரி கோ ரவுண்ட் ஐ வில் பி வித் யூ
வேர் ஹார்ட்ஸ் வில் பி ஹை அண்ட் ஹெவன் இன்
அவர் வியூ
குளோஸ் யுவர் அய்ஸ் அண்ட்டெல் மி வாட்யு வீல்
ஆன் தி மெர்ரி கோ ரவுண்ட் இட்ஸ் எ லவ்லி திரில்
இட்ஸ் எ லவ்லி திரில் இட்ஸ் எ லவ்லி திரில்

இயற்றியவர்: பாட்டு 2 பாடியவர்:
கண்ணதாசன் டி. எம். சௌந்தரராஜன்

ஒரு கோப்பையிலே என் குடி இருப்பு
ஒரு கோலமயில் என் துணை இருப்பு
இசை பாடலிலே என் உயிர் துடிப்பு
நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு
காவியத் தாயின் இளைய மகன்
காதல் பெண்களின் பெருந்தலைவன்
பாமர ஜாதியில் தனிமனிதன்—நான்
படைப்பதனால் என் பேர் இறைவன்
மானிட இனத்தை ஆட்டி வைப்பேன்—அவர்
மாண்டுவிட்டால் அதைப் பாடி வைப்பேன்
நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை (ஒரு

இயற்றியவர் பாட்டு 3 பாடியவர்கள்:
கண்ணதாசன் சௌந்தரராஜன், ஆர். ஈஸ்வரி

தாழம்பூவே தங்க நிலாவே தலையேன் குனிகிறது—அது
காமன் தொடுத்த கணைகளினாலே கனியாய் கனிகிறது
பாடல் சுவையே பனிவாய்மலரே பயமேன் வருகிறது இளம்
பருவத்தின் ஆசை உருவத்தில் ஏறி பயம்போல்தெரிகிறது
ஏலங்குழலாள் இளகிய நெஞ்சம் எதையோ
நினைக்கிறது—அது
நாலும் பழகும் நாளையப் பொழுதை நினைத்தே
பறக்கிறது (தாழம்
பூரணநிலவின் தோரணம் ஏனோ புன்னகைபுரிகிறது அதில்
காரணம் பாதி காரியம்பாதி கதையாய் வருகிறது
இளமை திரண்டு தனிமை நிறைந்து
இதயம் மலர்கிறது—அதில்
உயிர்கள் இரண்டும் பழகியபின்பே உறவும் புரிகிறது (தா

இயற்றியவர்: கண்ணதாசன் | பாட்டு 4 | பாடியவர்கள்: சௌந்தரராஜன், சுசீலா

இருவ : பசுமை நிறைந்த நினைவுகளே
பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் களித்த தோழர்களே பறந்து செல்கின் [றோம் நாம்
ஆண் : குரங்குகள் போலேமரங்களின் மேலே
தாவித்திரிந்தோமே
பெண் : குயில்கள் போலே இரவும் பகலும் கூவித்
திரிந்தோமே
ஆண் : வரவில்லாமல் செலவுகள் செய்து
மகிழ்ந்திருந்தோமே
பெண் : வாழ்க்கை துன்பம் அறிந்திடாமல்
வாழ்ந்துவந்தோமே (பசுமை
ஆண் : எந்த ஊரில் எந்த நாட்டில் என்றுகாண்போமா
பெண் : எந்த அழகை எந்த வழியில் கொண்டு
செல்வோமோ
ஆண் : இந்த நாளை வந்த நாளில் மறந்துபோவோமோ
பெண் : இல்லங்கண்டு பள்ளிகொண்டு மயங்கி
நிற்போமோ (பசு

இயற்றியவர்: கண்ணதாசன் | பாட்டு 5 | பாடியவர்: சௌந்தரராஜன் குழுவினர்

புத்தன்வந்த திசையிலே போர் புனிதகாந்தி
சத்தியத்தின் நிழலிலே போர் [மண்ணிலே போர்
தர்மத்தாயின் மடியிலே போர்—போர்—போர்!
பரதநாட்டு திருமகனேவா பச்சை ரத்த திலகமிட்டுவா
பொருது வெங்களத்தை நோக்கி வா
பொன்னளந்த மண்ணளக்க வா—வா—வா!
மக்களுக்கு புத்திசொல்லிவா மனைவி கண்ணில் முத்த
பெற்றவர்க்குத் தாள் வணங்கி வா [மிட்டுவா
பேரெடுக்க போர் முடிக்க வா—வா—வா!
மறுபடிக்கும் வீழ்வதில்லை வா
மரணமேனும் பெறுவதென்று வா
பருவ நெஞ்சை முன் நிமிர்த்தி வா
பகைவனுக்கும் ஓர் உயிர்தான் வா—வா—வா (புத்த

இயற்றியவர்: கண்ணதாசன் | பாட்டு 6 | பாடியவர்: எல். ஆர். ஈஸ்வரி

வாடைக் காற்றம்மா வாடைக் காற்றம்மா
வாலிப மனசை நாளுக்கு நாளா
வாட்டுவ தென்னம்மா வாட்டுவதென்னம்மா

ஓடை நீரில் நாட்டியமாடி ஓடுகின்றாய் பெண்
உள்ளம் கண்டு மெள்ளச் சென்று பேசுகின்றாய்
ஆடை தொட்டு ஆடவர் போலே ஆடுகின்றாய்—என்
அங்கம் முழுதும் பொங்கித் தழுவிப்பாடுகின்றாய்(வா
ராஜா ராணி ரகசியமெல்லாம் சொல்லுகின்றாய்—என்
ரோஜா இதழை லேசாத் தடவிக் கொல்லுகின்றாய்
தெற்குத் தென்றல் உன்னிடம் சொன்ன
சங்கதி என்னம்மா—என் சின்ன உடம்பை இருவரும்
என்கதி என்னம்மா [தொட்டா

இயற்றியவர்: பாட்டு 7 பாடியவர்:
கண்ணதாசன் டி. எம். சௌந்தரராஜன்

பனிபடர்ந்த மலையின் மேலே
படுத்திருந்தேன் சிலையைப் போலே
கனிதொடுத்த மாலை போலே
கன்னிவந்தாள் கண் முன்னாலே
குனிந்து நின்ற முகத்தைப் பார்த்தேன்
குங்குமப் பூ நிறத்தைப் பார்த்தேன்
கனிந்து நின்ற கன்னம் பார்த்தேன்
கண்ணீரின் சின்னம் பார்த்தேன்
கலங்கினேன் துடித்தேன் அம்மா...அம்மம்மா
நீ அழுத நிலையறிந்து நிலவே அழுததம்மா
வானம் அழுததம்மா வண்ணமலர் புலம்புதம்மா
கானம் அழுததம்மா கானகமும் கலங்குதம்மா
காரணத்தைச் சொன்னால் நாளை நான் உதவிசெய்வேன்
வாரணங்கள் கூட்டிவந்து வண்ணத்தேர் ஓட்டி வந்து
தோரணங்கள் ஆடுகின்ற தூயநகர் வீதியிலே
ஊர்வலமாய் உன்னை உடனழைத்து நான் வருவேன்
சொல்லமா சொல்லென்றேன் தூயமகள் தலைநிமிர்ந்
அமைதி தேடி உருகி நின்றேன் [தாள்
அன்பு வெள்ளம் பெருகவந்தே இமயம்முதல் குமரி
இதயத்தையே திறந்து வைத்தேன் [வரை
உண்டு பசியாற உலகம் வரட்டுமென்று
கண்டு தேன் கதலி கரந்த பால் கரந்தபடி
கொண்டுவந்து வைத்துக் கூப்பிட்டேன்வருகவென்று
பசியாற ஓடிவந்த பத்துப்பேர் மத்தியிலே
பகையாற ஒருவன்வந்த பாபத்தை என்ன சொல்வேன்
யாரை அழித்தேன் யார் குடியை நான் கெடுத்தேன்

சீர் சுமந்துசென்றது தான்செய்ததொருபாவமென்றாள்
அன்னை உரைத்தமொழி அததனையும்கேட்டிருந்தேன்
பின்னர் மனதில் பெருந்துணிவு மோதிவர
பெருந்துணிவு மோதிவர வீரமுண்டு தோள்களுண்டு
வெற்றி கொள்ளும் ஞானமுண்டு சாரமிக்க தர்மம்
தர்மம் மிக்க தலைவன் உணடு [உண்டு
அன்பு நிறைந்த மகன் அருள் நிறைந்த கருணை மகன்
பண்பு நிறைந்த மகன் ஏழநாட்டின் மூத்த மகன்
இருக்கின்றான் தாயே ஏங்காதே என்றுரைத்தேன்
அன்னை சிரித்தாள் அடடாவே அச்சிரிப்பில்
முன்னை தமிழ் மணமே முனைத்தெழுந்து நின்றதம்மா
என்னை மறந்தேன் இரவுலகில் சேர்ந்துவிட்டேன்
கண்ணை மெல்ல மறைத்து கற்பனையில்
கலந்துவிட்டேன்
கற்பனையில் கலந்துவிட்டேன் (பழ

இயற்றியவர்: கண்ணதாசன் — பாட்டு 8 — பாடியவர்: மனோரமா

போகாதே போகாதே என்கணவா—என் கணவா
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்
பட்டாளஞ் சிப்பாய்கள் நடக்கக் கண்டேன்—நடக்க
பாதையின் ஓரத்தில் கிடக்ககண்டேன் [கண்டேன் நீ
எட்டுபேர் உன்னைவந்து பிடிக்க கண்டேன்—அதில்
எழுபேர் பெண்களாய் இருக்க கண்டேன்
பூனை எல்லாம் உன்னைத துரத்தக்கண்டேன்
துரத்தக்கண்டேன்—ஒரு
புல்லுத் தடுக்கி நீ விழுகக் கண்டேன்
சேனையெல்லாம் உன்னை மிதிக்க கண்டேன்—நீ
திரும்பாத ஊருக்கு நடக்கக் கண்டேன் (போகாதே

இயற்: கண்ணதாசன் — பாட்டு 9

அம்மா உன் திருமுகத்தில் ரத்தத்தால் திலகமிட்ட
அழகு மகன் மறைந்தானம்மா
இம்மாநிலம் காக்க இறந்த பெருஞ்சேனைகளும்
ரத்தத்தில் மிதந்ததம்மா!
பாரதமே! தாயே! பனிமலையைக் காப்பாரை
பரிபாலித்தருளுவாயே அம்மா...அம்மா...!
வணக்கம்

சங்கீத பிரஸ், மதுரை-1

எங்களிடம் கிடைக்கும்

எம். ஜி. ஆர். புதிய கொள்கை பாடல்கள்	1—00
எம்ஜியார் புதிய காதல் பாடல்கள்	1—00
எம். ஜி. ஆர். வெற்றிப் பாடல்கள்	0—75
தங்கப் பதக்கம் கதை வசனம்	1—00
வீரபாண்டிய கட்டபொம்மன் கதை வசனம்	1—00
வசந்தமாளிகை கதை வசனம்	0—80
பராசக்தி கதை வசனம்	1—00
ரத்தக்கண்ணீர் கதை வசனம்	1—00
சௌந்தரராஜன் முருகன் பாடல்கள்	0—80
சீர்காழி முருகன் பாடல்கள்	1—00
சூலமங்கலம் சகோதரிகள் முருகன் பாடல்கள்	1—00
சுசீலா சினிமா பாடல்கள்	1—00

டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா
பாடிய சினிமா பாடல் 0—80

ஸ்ரீசங்கு கம்பெனி,
150, நேதாஜி ரோடு
மதுரை—1